2009 ஜூலை 9]

ஆற்றுப் படுகைகளை எடுத்திருக்கிறோம். அதிலே ஒரு படுகையாக கூவத்தையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். கூவத்திற்கு ஒரு தனி Division போட்டு, அதைமட்டும் கவனிக்க வேண்டும் என்று உலக வங்கி வற்புறுத்தியிருப்பதால், அதற்கென்று திரு. பணிந்தர் ரெட்டி, ஐ.ஏ.எஸ். அவர்களை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நியமித்திருக்கிறார்கள். அதற்கென்று ஒரு தனி அலுவலகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. உலக வங்கியோடு பேச்சுவார்த்தை நடத்தவும், அதாவது Draft-ஐ, திட்டத்தினுடைய முதல் அறிக்கைகளைத் தயார் செய்கிற பணியையும் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அமெரிக்காவில் இருக்கிற San Antonio என்ற ஒரு river, கூவத்தைப் போலவே இருந்தது என்பதால், அந்த San Antonio river-ஐ எப்படிச் சீர்படுத்தினார்கள் என்பதைப் பார்த்து வருவதற்கு இங்கிருக்கிற திரு. பணிந்தர் ரெட்டியுடன் மற்ற அதிகாரிகளை உள்ளடக்கி அரசு ஒரு team-ஐ அங்கே அனுப்பியிருக்கிறது. அவர்களும் ஒரு ரிப்போர்ட்டை தந்திருக்கிறார்கள். எனவே உலக வங்கி நிதியோடு கூவத்தைச் சீர்படுத்துவதற்கு அரசு தனிக் கவனம் செலுத்துகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

103—

பணிமனை

***53907—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, மணவாசி பகுதியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதியில் உள்ள கிராமங்களுக்கு கரூர் மற்றும் முசிறி ஆகிய ஊர்களில் பணிமனைகள் அமைத்து, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்

இயக்கப்படுகின்றன. எனவே, கரூரிலிருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ள மணவாசி பகுதியில் தற்போது பணிமனை அமைக்க இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டது கிடைக்கும், தொட்டது துலங்கும் என்ற வாக்கிற்கேற்ப, பொற்கால ஆட்சி நடத்தும் மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் ஆட்சியில், அனைத்துக் கிராமங்களுக்கும் பேருந்து வசதி ஏற்படுத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், எங்கள் தொகுதியிலுள்ள கிராமங்களுக்கு முழுமையான பேருந்து வசதி ஏற்படுத்திட வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில், கிருஷ்ணராயபுரம் தொகுதிக்கு நகரப் பேருந்துகள், கரூர் பகுதியிலிருந்து சுமார் 38 கி.மீ. தூரமும், குளித்தலை பகுதியிலிருந்து சுமார் 38 கி.மீ. தூரமும் இயக்கப்படுகின்றன. ஆனால், சுமார் 70 கி.மீ. தூரமுள்ள தொகுதியின் உட் கிராமங்களுக்குப் போதுமான நகரப் பேருந்து வசதி இல்லை. இதைப் போக்கிட, மணவாசி பகுதியில் போக்குவரத்துப் பணிமனை உருவாக்கித் தந்தால், அங்கேயிருந்து தொகுதியின் உட்கிராமங்களுக்குப் போதுமான பேருந்து வசதிகள் ஏற்படுத்தித் தர வாய்ப்பு ஏற்படும் என்பதோடு மட்டுமல்லாமல், கரூர் மாவட்டத்தில் கரூர் நகரின் போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடத்தில் கரூர் 1 மற்றும் கரூர் 2 பணிமனைகள் இயங்கி வருகின்றன. கரூர் மாவட்டத்தில், கரூரில் இந்த இரண்டு பணிமனைகள் தவிர, வேறு எங்கும் இல்லை. தேசிய நெடுஞ்சாலை எண் 67-ல் செல்கின்ற பேருந்துகள் இடையில் சிறிய பழுது ஏற்பட்டால்கூட, சரி செய்ய கரூர் அல்லது முசிறி ஆகிய பணிமனைகளுக்குத்தான் செல்ல நேரிடுகின்றன. இதனால் கால விரயமும், எரிபொருள் இழப்பும் ஏற்படுகின்றன. எனவே, கரூருக்கும், குளித்தலைக்கும் இடையில் மையப் பகுதியான மணவாசியில் போக்குவரத்துப் பணிமனை அமைந்தால், பொது மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதால், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே பணிமனை அமைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2009 ஜூலை 9]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கையில் உள்ள மணவாசி கிராமம், கரூரிலிருந்து 16 கி.மீ. தூரத்திலும், முசிறியிலிருந்து 29 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் திருச்சி மண்டலத்தின் பணிமனைகள் கரூரில் ஒன்றும், முசிறியில் ஒன்றும் மற்றும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், ஈரோடு மண்டலத்தின் பணிமனை கரூரில் ஒன்றும் உள்ளது. ஆக, ஏற்கெனவே 1992 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண் 61-ன்படி, ஒரு பணிமனைக்கும், இன்னொரு பணிமனைக்கும் 40 கிலோ மீட்டர் தூரம் இடைவெளி இருக்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற இடத்திலிருந்து 29 கிலோ மீட்டர், 16 கிலோ மீட்டர் இடைவெளிகளில் பணிமனைகள் அமைந்திருக்கின்ற காரணத்தால், புதிய பணிமனையை அங்கு அமைக்க இயலாது.*

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.*

திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணவாசி பகுதியில் இரண்டு தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. அங்கு சுமார் 5,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், காவிரியில் கட்டப்படவிருக்கின்ற கட்டளைப் படுகை அணையையொட்டி அமையவிருக்கின்ற இருவழிச் சாலையும் இந்தப் பகுதியில்தான் வருகின்றது. எதிர்காலத்தில் கரூர், நாமக்கல் மாவட்டங்களை இணைக்கின்ற பகுதியாக இது இருக்கின்ற காரணத்தினால், இரு மாவட்ட மக்களும் பயன்பெறும் வகையில், பணிமனை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மண்டலத்தின் கரூர் பணிமனையின்மூலம், 51 நகரப் பேருந்துகளும், 83 புறநகர்ப் பேருந்துகளும், முசிறி பணிமனையின்மூலம் 49 நகரப் பேருந்துகளும், 36 புறநகர்ப் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. ஈரோடு மண்டலத்தின்மூலம் அமைக்கப்பட்டிருக்கும் கரூர் பணிமனையின்மூலம் 11 நகரப் பேருந்துகளும், 39 புறநகர்ப் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்காலத்திலே அமைக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார்; வாய்ப்பிருக்குமானால், அங்கு தேவை இருக்குமானால், அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம்.

திரு. ராம. சுப்புராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருமயம் தொகுதியின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருமயம் தொகுதியின் தலைமையிடமான திருமயத்தில், போக்குவரத்துப் பணிமனை அமைக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்கள் தங்கள் பகுதிகளிலே போக்குவரத்துக் கழகப் பணிமனைகள் அமைக்கப்பட வேண்டும் என்று விரும்புவதற்குக் காரணம், அந்தப் பகுதிகளில் பணிமனை அமைக்கப்படுமானால், அங்கிருந்து நகரப் பேருந்துகளை வெகுவாக இயக்குவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்கிற காரணத்தால்தான், அப்படிக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இருக்கின்ற நிதிநிலைமைக்கேற்ப, ஆங்காங்கு தேவையான அளவிற்குப் பணிமனைகள் இப்போது அமைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாகச் சில இடங்களில் வேண்டுமென்று கேட்கின்றபோது, மாவட்ட ஆட்சித் தலைவரின்மூலமாக இடமும், அதனை அமைப்பதற்காகும் தொகையிலே 25% சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்குவார்களானால், அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும். மேலும், புதுக்கோட்டையிலிருந்து திருமயம் 40 கிலோ மீட்டருக்குள்ளேயே வருகிறது. எனவே, தேவை ஏற்படின் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

2009 ஜூலை 9]

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் வரகூர் தொகுதிக்குட்பட்ட பெருமாத்தூருக்கு ஒரு வழித் தடத்தில் நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. அந்தப் பேருந்து பெரம்பலூருக்கும், பெருமாத்தூருக்கும் மாறி மாறிச் செல்வதோடு, பெரம்பலூர் டிப்போவிலேயே லப்பைவழிகாடு பேருந்தும், பெருமாத்தூர் பேருந்தும்தான் அதிகப்படியான கலெக்ஷனைக் கொடுத்து வருகின்றன. பெருமாத்தூருக்கு இயக்கப்படுகின்ற பேருந்து பழைய பேருந்தாக இருப்பதால், வாரத்திற்கொருமுறை வழியிலேயே நின்று விடுகிறது. அதுகுறித்து அந்த டிப்போவிற்குப் பலமுறை நான் போன் செய்து சொல்லியும், அங்கே பழைய பேருந்தே இயக்கப்படுவதால், அடிக்கடி பொது மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அங்கு புதிய பேருந்து இயக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

அதேபோல, குன்னத்திலிருந்து பெரம்பலூருக்கு விரைவுப் பேருந்து இயக்கப்பட வேண்டுமென்று நான் இரண்டு, மூன்று ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்து வருகிறேன். ஏனெனில், எங்கள் தொகுதி மக்கள் பெரம்பலூரிலிருந்து சென்னைக்கு வருவதாக இருந்தால், பெரம்பலூர் பேருந்து நிலையத்திலே வெகு நேரம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, எங்களுடைய தொகுதியின் மையப் பகுதியான குன்னத்திலிருந்து, சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூரிலிருக்கின்ற பணிமனையை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் இப்போது எழுந்திருக்கின்றது. காரணம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், பெரம்பலூர் மண்டலத்திலே புதிதாக ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை, கிட்டத்தட்ட 3,000 ஏக்கர் பரப்பளவிலே அமைக்க அனுமதி வாங்கித் தந்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே பெரிய அளவிலே ஒரு பணிமனை அமைக்கக்கூடிய முயற்சி, இந்த ஆண்டு நம்முடைய துறையின்மூலமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மேலும், குன்னத்திலிருந்து விரைவுப் போக்குவரத்துக் கழகம் சென்னைக்கு வேண்டுமென்று கேட்கிறார்கள். அரியலூரிலிருந்து குன்னம் வழியாகத்தான் சென்னைக்குப் பேருந்து வருகிறது;

தஞ்சாவூரிலிருந்து வருகின்ற பேருந்தும் குன்னம் வழியாகத்தான் வருகிறது. எனவே, பெரம்பலூரில் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. அங்கு பயணிகளின் அடர்வைக் கருத்தில்கொண்டு, தேவை ஏற்படின், விரைவுப் போக்குவரத்துக் கழகம் அல்லாது, அங்கிருக்கின்ற கும்பகோணம் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாகச் சென்னைக்கு நிச்சயமாக ஒரு பேருந்து இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரைச் சாலையின் கார்னர் பகுதியில் திருவான்மியூர் பணிமனை அமைந்திருக்கின்றது. மிகவும் தாழ்வான பகுதியில் இருக்கின்ற காரணத்தினால், அங்கே தண்ணீர் தேங்கி நின்று பணி செய்வதற்குண்டான இடைஞ்சல்களும், பேருந்துகள் வந்து செல்வதற்கும், பொது மக்கள் வந்து செல்வதற்கும் இடைஞ்சலாக இருக்கின்றது. அங்கே terminus-ம் அமைந்திருக்கின்றது. அதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதுப்பித்துத் தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல, சென்னையில் இருக்கின்ற கோடம்பாக்கம் பணிமனை, அய்யப்பன்தாங்கல் பணிமனை, திருவான்மியூர் பணிமனை போன்ற பணிமனைகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் கொஞ்சம் பள்ளமான இடமாக இருக்கிறதென்று சொல்லி, கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்காக 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தந்து, இப்போது அந்தப் பணிமனைகளைப் புதுப்பிக்கக்கூடிய பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஏன் இவ்வளவு காலதாமதமானதென்று சொன்னால் டெண்டர் எடுப்பதிலே கொஞ்சம் கூடுதலாக டெண்டர் போட்டுவிட்ட காரணத்தால் மீண்டும் மீண்டும் புதிய டெண்டராக வைத்து இப்போதுதான் finalise

2009 ஜூலை 9]

செய்து அந்த 2 பணிமனைகளிலும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவிலே திருவான்மியூர் பணிமனை புதுப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *104*, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

104—

மருத்துவமனை

***39259—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் ஒன்றியம், சேம்பார் கிராமத்தில் தாய் சேய் நல மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் ஒன்றியம், சேம்பார் கிராமத்தின் மக்கள் தொகை 453 ஆகும். அப்பகுதியிலுள்ள மக்களுக்கு, அக்கிராமத்திற்கு அருகிலுள்ள துணை சுகாதார நிலையம், ஆரம்ப சுகாதார நிலையம், தலைமை மருத்துவமனை ஆகியவற்றின்மூலம் தேவையான தடுப்பூசிப் பணிகள், தாய் சேய் நலப்பணிகள் மற்றும் அனைத்து மருத்துவப் பணிகளும் கிடைக்கின்றன. எனவே, சேம்பார் கிராமத்தில் தாய் சேய் நல மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்களுக்குப் பதிலாக திரு. தி. இராமசாமி அவர்கள்.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் ஒன்றியம், சேம்பார் கிராமம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS